1971 ஜூலை 15]

இருப்பதில்லை. அவர்களுக்கெல்லாம் அரசும் இப்படிப்பட்ட படங்களை எடுங்கள் என்றும் கூற முடியாது. ஆனால், ஆபாசம் மிகுந்ததாயும், மக்களிடத்திலே துவேஷ உணர்ச்சிகளைப் பரப்பும் வகையிலேயும் இருந்தால் அவைகளைத் தடுக்க அரசு இயலுமே தவிர, இப்படிப்பட்ட படங்களை எடுங்கள் என்று கூறி அவர்களை வற்புறுத்த இயலாது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிச் செய்திப்படங்கள் துண்டு துண்டாக இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்த வரிசைகளையெல்லாம் ஒன்றுபடுத்தி ஒரு முழுநீளப் படமாகத் தயாரித்து, அவர்களுடைய வாழ்க்கையிலே சில நிகழ்ச்சிகளைச் சேர்த்து மெருகு ஊட்டி ஒரு நீளப்படமாகத் தயாரிக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தணியாத ஆவலை நான் பாராட்டுகிறேன். அந்த ஆவலின் அடிப்படையில் அப்படிப்பட்ட முயற்சிகளை நாம் செய்யலாம். ஏற்கனவே அண்ணா அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள், அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள், அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகள் இவைகளெல்லாம் செய்திப்படங்களின் மூலமாக வெளியிடப்பட்டிருக்கின்றன. மேலும் அந்த முயற்சியிலே ஈடுபட எந்தத் தடையும் இல்லை. அதற்கேற்ற காலம் வரும் நேரத்தில் அதற்கான முயற்சிகளில் அரசோ அல்லது மற்றப் படத் தயாரிப்பாளர்களோ ஈடுபடக் கூடும்.

கிழக்கு ஜெர்மனியிலிருந்து நாய்கள் இறக்குமதி

* 239 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு அரசின் துப்பறியும் இலாக்காவிற்காக கிழக்கு ஜெர்மனியிலிருந்து நாய்கள் வரவழைக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான செலவுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம். ஆறு நாய்குட்டிகள் வரவழைக்கப்பட்டன.

(இ) அதற்கான செலவுத்தொகை ரூ. 37,049.

DR. H. V. HANDE : Sir, may I know from the Hon. Chief Minister the number of police dogs now in the hands of the Government and whether they are liberally used for the detection of crimes ? Also, may I know the ratio between the number of dogs used and the positive results achieved?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, இப்பொழுது நம்முடைய மாநிலத்தில் சென்னையிலே 9 நாய்களும், மதுரையிலே 5 நாய்களும், கோவையிலே 2 நாய்களும் இருக்கின்றன. இந்தத் துப்பறியும் நாய்களின் படை 1951-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதுமுதல் இதுவரையிலும், இந்த நாய்கள் கொலை, கொள்ளை, கள்ளக்கடத்தல், வீட்டுத், திருட்டுகள் ஆகியவை சம்பந்தப்பட்ட குற்றங்களைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்தப்பட்ட வகையில் இதுவரையில் 133 கொலைக் குற்றங்கள், 32 கொள்ளைக் குற்றங்கள்,

167 பெரிய திருட்டுகள், 51 வீட்டுத் திருட்டுகள் மற்றும் கள்ளக்கடத்தல் குற்றங்களில் கணிசமான அளவு வெற்றியோடு இவை உபயோகப்படுத்தப் பட்டுள்ளன என்பதைத் தவிர வேறெதுவும் சொல்வதற்கில்லை.

திரு. என். கணபதி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தப் போலீஸ் துப்பறியும் நாய்ப் படை இருப்பதால் ஓரளவுக்குக் குற்றங்கள் குறைந்திருக் கின்றன என்பது ஒத்துக்கொள்ள வேண்டிய விஷயம். அப்படிப்பட்ட துப்பறியும் நாய் படை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் இருந்தால் அது குற்றங்களைக் கண்டுபிடிக்க எளிதாகப் பயன்படும் என்ற ஒரு எண்ணம் எல்லோருக்கும் இருக்கிறது. அதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் ஏற்கனவே சென்னை, மதுரை, கோவை ஆகிய இந்தத் தலைநகரங்களில் இருப்பதாகச் சொன்னேன். இந்த ஆண்டு திருச்சி மாவட்டத்தின் தலைநகராகிய திருச்சியிலே இதுபோன்ற நாய்களின் படையை அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்தத் துப்பறியும் நாய்கள் சில சந்தர்ப்பங்களில் யாதுமறியாத குற்றமற்றவர்களைப் போலீசுக்குக் காட்டிக்கொடுத்து, அதனால் அந்த அப்பாவி மக்கள் பல தொந்தரவிற்கு ஆளாகிறார்கள் என்பதை இந்த அரசு அறியுமா? மேலும் இதுவரை இந்தத் துப்பறியும் நாய்களால் கண்டுபிடிக்கப்பட்ட கேஸ்களில் எத்தனை கேஸ்கள் தவறானவை என்று உயர் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்றத் தகவலை அரசு எங்களுக்கு அளிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : துப்பறியும் நாய்கள் சொல்வதையே முழுக்க நம்பி வழக்குகள் போடப்படுவதில்லை. குற்றங்களைக் கண்டுபிடிப்ப தற்காகப் பயன்படுத்தப்படும் பல்வேறு உபாயங்களில் துப்பறியும் நாய்களைக் கொண்டு பயன்படுத்துகின்ற உபாயமும் ஒன்றாகவே இருக்கிறதேயல்லாமல் முழுக்க முழுக்கத் துப்பறியும் நாய்களை நம்பியே வழக்குகள் பதிவுச் செய்யப்படுவதில்லை. குற்றமற்றவர்கள் சிலர் தொந்தரவிற்கு ஆளாகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் குற்றமற்றவர்கள் என்று இவர்களுக்கேத் தெரியும்பொழுது போலீசாருக்கும் குற்றமற்றவர்கள் என்று தெரிந்துவிடலாம். ஒரு சிறிது நேர இன்னலுக்கு ஆளானாலும் பிறகு அந்த இன்னலிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள்.

TRUTH ALONE TRIUMPHS

Re-opening of closed Textile Mills.

* 246 *Q.*—THIRU N.K. PALANISAMI :
THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government to re-open closed textile mills in the State?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மூடப்படும் நிலையிலும் மூடிய நிலையி லும் உள்ள பஞ்சாலைகள் மீண்டும் திறப்பதற்கென வர்த்தக வங்கிகளிடமிருந்து கடன் தொகைகள் பெறும்பொருட்டு இவ்வரசு உத்திரவாத நிதியுதவி அளித்து உள்ளது. மேலும், இந்த அரசு தமிழ்நாடு பஞ்சாலைக் கார்ப்ப ரேஷனை ஏற்படுத்தியுள்ளது. அது கோவையில் ஐந்து பஞ்சாலைகளை ஏற்றுக் கொண்டுள்ளது.